**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer,
Pudukkottai.

**Thiruvalluvar Aandu 2057 Shri Visuvavasu Varudam Masi Thingal 29th day**

**Friday the 13th day of March'2026**

Calender Case No.165/2024
CNR No.TNPD01-006881-2024

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | NIB CID Trichy P.S. in Cr.No. 01/2024 u/s 8(c)r/w 20(b)(ii)(B),29(1) of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | 1) Mariappan<br>2) Muthukumar |
| 4. | Father's Name /Husband Name | 1) Rajagopal<br>2) Thirukudaiayar |
| 5. | Occupation | 1) Coolie<br>2) Coolie |
| 6. | Residence | 1) No.58, Muthamil Street, Itteri, Reddiarpatti, Tirunelveli District.<br>2) No.2/37, Main Road, Reddiarpatti, Tirunelveli District. |
| 7. | Age | 1) 49<br>2) 30 |
| | **Date of** | |
| 8. | Occurrence | 09.01.2024 |
| 9. | Complaint | 09.01.2024 |
| 10. | Apprehension | 1) 09.01.2024<br>2) 09.01.2024 |

| | | |
|---|---|---|
| 11. | Release on bail | 1) 15.04.2024<br>2) 28.03.2024 |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 07.01.2026 |
| 14. | closure of trial | 12.01.2026 |
| 15. | Sentence or order | 13.03.2026 |
| 16. | Service of copy of Judgment or finding on accused. | 13.03.2026 |
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **Chief** **Cross**<br>1) 07.01.2026 - 07.01.2026<br>2) 07.01.2026 - 07.01.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 12.01.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 1) 09.01.2024 - 15.04.2024<br>2) 09.01.2024 - 28.03.2024 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 24.09.2024 |

இவ்வழக்கு 12.01.2026–ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது

வழக்கறிஞர் திரு. எம். செந்தில்குமார்,B.A.,B.L.,அவர்கள் முன்னிலையாகியும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ரமேஷ்பாபு B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

கடந்த 09.01.2024–ம் தேதி சுமார் 05.50 மணிக்கு திருச்சி போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு எல்லைக்குட்பட்ட திருச்சி இரயில்வே ஜங்ஷன் நடைமேடை 2ன் சுரங்கப்பாதை அருகில் இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் சுமார் 16 கிகி எடை கொண்ட தடை செய்யப்பட்ட கஞ்சாவை யாதொரு அனுமதியுமின்றி சட்டத்திற்கு புறம்பான வகையில் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் எதிரிகள்மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B), 29(1) of NDPS Act 1985–ன் கீழ் NIB CID Trichy காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிகளுக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், எதிரிகள் மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B), 29(1) of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி

குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்கள்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா1 மற்றும் அசா2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அசாஆ1 முதல் அசாஆ13 சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவை சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு-

(i) அசா1 திரு. அழகேசன் தனது சாட்சியத்தில் கடந்த 09.01.2024- ம் தேதி தான் திருச்சி போதைப்பொருள் தடுப்பு பிரிவில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது திருச்சி போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் காளிமுத்து அவர்களுக்கு உதவியாக நிலையத்தில் இருந்து 1.30 மணிக்கு தக்க உபகரணங்களுடன் திருச்சி ரயில்வே நிலையம் பிளாட்பார்ம் 2- க்கு இரயில்வே பாதுகாப்பு படை பிரபு என்பவர் உதவியுடன் ஹவுரா எக்ஸ்பிரஸ் இரவு 2.30 மணிக்கு இறங்கி வந்த பயணிகளை சோதனை செய்ததாகவும் , பின் 5.30 மணியளவில் சுரங்க நடைபாதையில் நின்று கொண்டிருந்தவர்கள் தங்களை பார்த்து தப்பித்து ஓட முயற்சித்த மாரியப்பன் , திருநெல்வேலி அவர் கொண்டு வந்த கருப்பு நிற பேக் 2 காக்கி நிற பார்சல் அவருடன் வந்த மற்றொரு நபர் பெயர் தெரியவில்லை அவர் கொண்டு வந்த கருப்பு நிற பேக் 6 காக்கி நிற பார்சல் இருந்தது என்றும் தலா 50 கிராம் வீதம் 8 பாக்கெட் இராசயன பரிசோதனைக்கும் தலா 50 கிராம் நகல் மாதிரிக்கும் எடுத்ததாகவும்

அதனை S,L என்றும் மீதமுள்ள 15.200 கிராம் C என குறியீடு செய்து நிலையம் கொண்டு சென்றதாகவும் தாங்கள் கொண்டு சென்ற தராசில் எடைபோட்டு பார்க்க மொத்தம் 16 கிலோ கஞ்சா இருந்தது என்றும் சோதனை சம்மத கடிதம் அ.த.சா.ஆ 1,2 என்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2 வது கையெழுத்து தன்னுடையது என்றும் அது அ.த.சா.ஆ 3,4 என்றும் கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ 5,6 என்றும் ஆய்வு நமுனாக்கள் அ.த.சா.ஆ 7,8 என்றும் அவர்கள் இருவரையும் கைது செய்து நிலையம் வந்து NIBCID திருச்சி குற்ற எண் 01/2024 வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்ததாகவுலம் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா2 திரு. காளிமுத்து தனது சாட்சியத்தில் கடந்த 09.01.2024 ம் தேதி தான் பணியில் இருந்தபோது தனக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் காவல் நிலைய அலுவலில் இருந்த தான் மற்றும் மு.நி.காவலர் திரு.அழகேசன் அவர்களுடன் 12.45 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்களிடம் இரவு ஹவுரா to திருச்சி வரும் ரயிலில் கஞ்சா எனும் போதைப்பொருள் கொண்டு வருகிறார்களா என்று சோதனை செய்ய காவல் ஆய்வாளரிடம் முன் தகவல் கடிதம் எழுத்து பூர்வமாக கொடுத்து அனுமதி பெற்று 1.00 மணியளவில் தானும் மேற்படி காவலரும் அரசு உபகரணம் மற்றும் மெடிக்கல் கிட் எடுத்து கொண்டு அரசுக்கு சொந்தமான TN 22 G 0331 TATA Specio திருச்சி காவல் ஆயுதப்படை காவலர் 2162 திரு.சந்திரகாசன் வாகனத்தில் ஓட்டுனருடன் திருச்சி ரயில்வே ஜங்சன் சென்று அங்கு RTO காவல் நிலையத்தில் ரயில் சோதனை செய்வதற்கான கேட்டு SSI செல்வராஜு மற்றும் காவலர்

திரு.பிரபு ஆகியோர் உதவியுடன் நடைமேடை 2 ல் 2.20 மணிக்கு வந்த ஹவுரா திருச்சி ரயிலில் இறங்கி வந்த பயணிகளை சோதனை செய்ததாகவும் பின்பு 5.50 மணிக்கு திருச்சி ரயில்வே ஜங்சன் சுரங்கபாதையில் சோதனை செய்தபோது சந்தேகத்தின் பேரில் 2 நபர்கள் கருப்பு நிற சோல்டர் பேக்கை கொண்டு வந்தவர்களை விசாரணை செய்ய முன் வந்த போது சந்தேக நபர்கள் இருவரும் ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரணை செய்த போது மாரியப்பன் வயது 51/2026 த/பெ ராஜகோபால் கதவு எண் 55, செம்மொழி தெரு, ரெட்டியாபட்டி , திருநெல்வேலி மாவட்டம். மற்றும் முத்துகுமார் வயது 32/26 த/பெ திருகுடையார் ரெட்டியாபட்டி திருநெல்வேலி மாவட்டம் என்பவர்களை நிறுத்தி கஞ்சா என்னும் போதைப்பொருட்கள் பேக்கில் உள்ளதா சோதனை செய்ய வேண்டி அவர்களிடம் அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்பாகவோ உங்களை சோதனை செய்ய 52(1) NDPS Act பிரகாரம் உங்களை சோதனை செய்ய உரிமம் உண்டு என்று கேட்ட போது அதற்கு சந்தேகப்பட்ட எதிரிகள் இருவரும் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்பாகவோ தங்களை சோதனை செய்ய தேவையில்லை என்றும் திருச்சி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு அதிகாரி ஆகிய நீங்கள் சோதனை செய்தால் போதும் என்று சொன்னவுடன் பின்பு அருகில் நின்ற பொதுமக்களை சந்தேக எதிரிகள் கொண்டுவந்த பேக்கை சோதனை செய்ய சாட்சியாக இருக்க கேட்ட போது யாரும் முன்வராததால் 5.55 மணி முதல் 6.00 மணி வரை எதிரிகளிடம் சோதனை நடத்தினேன் என்றும் மு.நி.கா அழகேசன் மற்றும் காவலர் திரு.பிரபு ஆகியோர்களை சாட்சியாக

இருக்க கேட்டுக்கொண்டு சந்தேக எதிரி மாரியப்பன் என்பவர் கொண்டு வந்த சோல்டர் பேக்கை சோதனை செய்த போது காக்கி கலர் டேப்பால் சுற்றபட்ட 2 பொட்டலங்களும் இருந்தது என்றும் மற்றொரு நபரான முத்துக்குமார் என்பவர் கொண்டு வந்த சோதனை பேக்கை சோதனை செய்த போது கருப்பு கலர் பேக்கால் சுற்றப்பட்ட 6 பொட்டங்கள் இருந்தது என்றும் பின்பு தாங்கள் கொண்டு சென்ற எடை மிசினை வைத்து எடை பார்த்தபோது தலா 8 பொட்டங்கள் அதில் தலா ஒவ்வொரு பொட்டலத்திலும் தலா 2 கிலோ எடை இருந்தது என்றும் பின்பு 8 பொட்டலங்களையும் பிரித்து பார்த்த போது இலை, தழையுடன் கூடிய தாவரப்பொருள் இருந்தது என்றும் அதில் சிறிதளவு எடுத்து தீ வைத்து பார்த்தபோது கஞ்சா நெடி வீசியது என்றும் பின்பு 8 பொட்டலத்தில் இருந்த கஞ்சாவை தாங்கள் கொண்டு சென்ற வெள்ளை நிற உரசாக்கு பையில் போட்டு சணலால் கட்டி முடிச்சி NIBCID சீல் வைத்து P1 என குறியீடு செய்தேன் என்றும் பின்பு சந்தேக நபர்கள் இருவரையும் மற்றும் 6.00 மணி முதல் 6.10 மணி வரை சோதனை செய்தபோது மாரிமுத்து என்பவரிடம் 6.10 மணி முதல் 7.10 மணி வரை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன் என்றும் நோக்கியோ போன் மற்றும் ரயில் பயண டிக்கெட் மற்றும் மற்ற சந்தேக எதிரி முத்துகுமாரிடம் Vivo செல்போன் ஒன்று கைப்பற்றினோம் என்றும் பின்பு சந்தேக எதிரி மாரியப்பன் என்பவரிடம் கைப்பற்றிய சொத்துகளான நோக்கியோ போன் P2 என்றும் ரயில் பயண டிக்கெட் P3 என குறியீடு செய்தும் எதிரி கஞ்சா கடத்தி வருவதற்கு பயன்படுத்திய கருப்பு நிற சோல்டர் பேக்கை P4 என்றும் கஞ்சா கொண்டு வந்த காக்கி கலர் கவரை P5 என்றும் சந்தேக எதிரி 6.10 மணி முதல் 7.10 மணி வரை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன் என்றும் சந்தேக எதிரி

முத்துகுமார் கொண்டு வந்த Vivo செல்போனை கைப்பற்றி P6 என குறியீடு செய்தேன் என்றும் சந்தேக எதிரி முத்துகுமார் கொண்டு வந்த சோல்டர் பேக்கை கைப்பற்றி P7 என்றும் காக்கி கலர் கவர்களை P8, P9 என்றும் சந்தேக எதிரி 7.10 மணி முதல் 8.10 மணி வரை கைப்பற்றுதல் மகஜரில் சந்தேக எதிரி முத்துகுமாரிடம் கைப்பற்றினேன் என்றும் பின்பு இரண்டு நபர்களையும் காரணம் கூறி 8.10 மணிக்கு கைது செய்தேன்.8.10 மணி முதல் 8.40 வரை கைது குறிப்பாணை மூலம் மாரிமுத்து என்பவருக்கு சொந்த அண்ணன் ராஜுகுமார் என்பவரிடமும் , 8.10 மணிக்கு கைது செய்தேன் என்றும் 8.40 மணி முதல் 9.10 வரை கைது குறிப்பாணை மூலம் முத்துகுமார் என்பவருடைய தந்தை திருகுடையார் என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன் என்றும் மாரிமுத்து என்பவரிடம் துன்புறுத்தலோ , அச்சுறுத்தலோ இல்லாமல் 9.10 முதல் 10.10 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும் பின்பு முத்துக்குமார் என்பவரிடம் துன்புறுத்தலோ ,அச்சுறுத்தலோ இல்லாமல் தானாக முன்வந்து கொடுத்ததை 10.10 முதல் 11.10 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாகவும் பின்பு 2 எதிரிகளுடன் , சொத்துகளுடன் நிலையம் சென்று நிலைய குற்ற எண் 1/2024 சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act- வழக்கு பதிவு செய்ததாகவும் முன் தகவல் அ.த.சா.ஆ 9 என்றும் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 10 என்றும் பிரிவு 57 படிக்கான அறிக்கையை தனது மேல் அதிகாரியான ஆய்வாளருக்கு சமர்பித்தேன் என்றும் அந்த விரிவான அறிக்கை அ.த.சா.ஆ 11 என்றும் பின்னர் இவ்வழக்கின் ஆய்வாளரான திரு.ரமேஷ் அவர்களிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன் என்றும் ஆய்வாளர் ரமேஷ் தற்போது சேலம் மாவட்டத்தில் பணி மாறுதலில் சென்றுவிட்டார் என்றும் அவருடைய

கையெழுத்து தனக்கு உடன் பணியாற்றிய வகைக்கு தெரியும் என்றும் அவர் இவ்வழக்கில் மேற்கண்ட புலன் விசாரணை பொறுத்து ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அவர் இவ்வழக்கில் 1– 7 சாட்சிகளை விசாரித்தும். வாக்கு முலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும் மேலும் தடய சொத்தினை படிவம் எண் 95 ன் படி நீதிமன்றத்தில் ஒப்படைத்தும் நீதிமன்றத்தின் மூலம் மாதிரிக்கு எடுத்த தாவரபொருளை திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பகுப்பாய்விற்காக ஒப்படைத்தும் பகுப்பாய்வு அறிக்கையினை பெற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ 12 என்றும் படிவம் 95 அ.த.சா.ஆ 13 என்றும் வழக்கு சொத்தானது crlmp 4389/24 படி 12.08.2024 அழித்தல் குழுமம் மூலமாக அழிக்கபட்டது என்றும் கைப்பற்றபட்ட சொத்துகள் செல்போன் ,ரயில் டிக்கெட் , பேக் ,Vivo ஆண்ராய்டு செல் ஆகியவை முறையே சா.பொ. 1 முதல் 4 என்றும் எதிரிகள் மீது 30.03.2024 தேதி இறுதி அறிக்கை முடித்து குற்றபத்திரிக்கை நீதிமன்றத்திற்கு சமர்பித்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரிகள் அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார்கள். எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், எதிரிகள் மீது சட்டப் பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B),29(1) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், எதிரிகள் மீதான u/s 8(c) r/w 20(b)(ii)(B) ,29(1) of NDPS Act 1985 ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தங்களது வாதுரைப்பில், எதிரிகளுக்கும் , இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரிகளை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் தலைமைக் காவலர் அழகேசன் என்பவர் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் 09.01.2024–ம் தேதி திருச்சி போதைப்பொருள் தடுப்பு பிரிவில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது திருச்சி போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் மாரிமுத்துவிற்கு கிடைத்த தகவலின் பேரில் அவருடன் , அவருக்கு உதவியாக பகல் 1.30 மணிக்கு திருச்சி ரயில்வே நிலையம் பிளாட்பார்ம் 2–க்கு சென்று அங்கு இரயில்வே பாதுகாப்பு படை பிரவு என்பவர் உதவியுடன் உறவுரா எக்ஸ்பிரஸ் –ல் இரவு 2.30 மணிக்கு இறங்கி வந்த பயணிகளை சோதனை செய்ததாகவும் பின் 5.30 மணியளவில் சுரங்க நடைபாதையில் நின்ற மாரியப்பன் என்பவர் தங்களை பார்த்ததும் தப்பி ஓட முயற்சித்தபோது அவரையும் அவருடன் வந்த மற்றொரு நபரையும் பிடிக்க முயற்சித்ததாகவும் 1வது எதிரி மாரியப்பன் கருப்புநிற பாக்கெட்டில் 2 காக்கி நிற பார்சலும் மற்றொரு நபர் அவரது பாக்கெட்டில் 6 காக்கிநிற பார்சலும் தலா 50 கிராம் வீதம் வைத்திருந்ததாகவும் அதனை கைப்பற்றியும் அவற்றை எடை போட்டு பார்த்தபோது 16 கிகி கஞ்சா இருந்தது என்றும் அதற்கான எதிரிகளுக்கு வழங்கிய சோதனை சம்மத கடிதங்கள் அசாஆ1 மற்றும் அசாஆ2 என்றும் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் குறித்தும் , எதிரியிடம் இருந்து கைப்பற்றிய தடய சொத்துக்களான கைப்பற்றுதல் மகசர் அசாஆ5 மற்றும் அசாஆ6 என்றும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் சம்பவ சமயம், சம்பவ இடத்தில் 1,2 எதிரிகள் உறவுரா எக்ஸ்பிரஸ் ரயிலில் வந்துள்ளதும் அவர்கள் இருவரின் பேக்கில் மொத்தம் 16 கிகி கஞ்சா

இருந்துள்ளதும் அவற்றிலிருந்து மொத்தம் இருந்த 8 பாக்கெட்டுகளில் தலா 50 கிராம் வீதம் இரசாயன பகுப்பாய்வுக்கு மாதிரிக்கு எடுத்துள்ளதும் தெரியவருகிறது.

12. மேலும், அசா2 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சார்பு ஆய்வாளர் திரு. காளிமுத்துவின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் 09.01.2024–ம் தேதி தான் பணியில் இருந்தபோது தனக்கு கிடைத்ததாக ரகசிய தகவலின் அடிப்படையில் முநிகா அசா1 அழகேசனுடன் 12.45 மணிக்கு வந்த தகவல் குறித்து விபரம் சொல்லியும் காவல் ஆய்வாளரிடம் உறவுரா–விலிருந்து திருச்சி வரும் ரயிலில் கஞ்சா எனும் போதைப்பொருள் கொண்டு வருவதாக தனக்கு கிடைத்த தகவலை எழுத்து பூர்வமாக கொடுத்தும் 1.00 மணியளவில் முநிகா அழகேசனுடன் ரயில் நிலையம் சென்றும் அங்கு ரயில்வே போலீசார் சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வராஜ் மற்றும் காவலர் பிரபு ஆகியோர் உதவியுடன் ரயில் நடை மேடை 2–ல் 2.30 மணிக்கு சென்றும் அங்கு உறவுரா திருச்சி ரயிலிலிருந்து இறங்கி வந்த பயணிகளை சோதனை செய்தும் பின்பு 5.50 மணிக்கு திருச்சி ரயில்வே ஜங்சன் சுரங்க பாதையில் சோதனை செய்தபோது சந்தேகத்தின் பேரில் 2 நபர்கள் கருப்பு நிற சோல்டர் பேக்கை கொண்டு வந்தவர்களை விசாரணை செய்ய முயற்சித்தபோது அவர்கள் ஓட எத்தனித்ததாகவும் அவர்களை பிடித்து விசாரித்ததாகவும் அவர்கள் மாரியப்பன் மற்றும் முத்துக்குமார் என்றும் அவர்களிடம் கஞ்சா எனும் போதைப்பொருள் பேக்கில் உள்ளதா? என சோதனை செய்ய வேண்டி அது வகைக்கு அவர்களை நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்புக்கு சோதனை செய்ய எதிரிகளுக்குள்ள உரிமைகளை எடுத்துக்கூறியும் தனித்தனி சோதனை

சம்மத கடிதங்கள் தயாரித்தும் எதிரிகள் வைத்திருந்த பேக்கை கைப்பற்றியும் அதிலிருந்து கஞ்சாவையும் நோக்கியோ செல்போனையும் vivo செல்போனையும் கைப்பற்றியும் எதிரிகளுக்கு கைது அறிவிப்பு கடிதம் கொடுத்து கைது செய்தும் காவல் நிலையம் கொண்டு வந்து காவல் நிலைய குற்ற எண்.1/2024 சட்டப்பிரிவு 8(c)r/w 20(b)(ii)(B)of NDPS Act 1985 –ன் படி அசாஆ 10 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் எதிரியிடமிருந்து தடய சொத்தினை கைப்பற்றியதாகவும் அதில் பகுப்பாய்வுக்கென மாதிரி தாவர பொருள் எடுத்தது குறித்தும் தனது மேல் அதிகாரிக்கு NDPS சட்டப்பிரிவு 57 ன் பிரகாரம் விரிவான அறிக்கை தயார் செய்தும் தடய சொத்தினை நீதிமன்றத்தின் மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியும் வரப்பெற்ற பகுப்பாய்வு அறிக்கை அசாஆ 12 என்றும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா2 , அசாஆ 9 முன் தகவலின் பிரகாரம் தனக்கு கிடைத்த தகவலை தனது மேல் அதிகாரிக்கு எழுத்து மூலமாக பதிவு செய்து தெரிவித்துள்ளதும் அது வகைக்கு NDPS சட்டப்பிரிவு 42(1)ன் விதி முறைகளை அசா2 முறையாக பின்பற்றி உள்ளது தெரியவருகிறது.

13. மேலும், அசாஆ 1,2 சோதனை சம்மத கடிதங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 50–ன் விதி முறைகளை முறையாக அசா2 பின்பற்றியும் சோதனை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது தெரியவருகிறது. மேலும் கைது அறிக்கை அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 52 னை பின்பற்றியும் அசாஆ 10 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு நடந்த இவ்வழக்கு சம்பவம் குறித்து தனது மேல் அதிகாரியான ஆய்வாளருக்கு அசா2 NDPS சட்டப்பிரிவு 57 ன் பிரகாரம் அசாஆ 11 –ன் படி விரிவான அறிக்கை தயார் செய்தும் விபரம்

தெரிவித்துள்ளதால் அது வகைக்கு NDPS சட்டப்பிரிவு 57ன் விதி முறைகளை சார்பு ஆய்வாளர் அசா2 முறையாக பின்பற்றியும் எதிரிகள் பேரில் வழக்கு நடவடிக்கை எடுத்துள்ளது தெரியவருகிறது.

14. அது வகைக்கு, அசாஆ12 பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் அசா2 இவ்வழக்கின் 1,2 எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய 16 கிகி கஞ்சாவை பொறுத்து அதனை அசாஆ12 பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் கஞ்சா என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே எதிரிகள் மீதான NDPS சட்டப்பிரிவு 8(c)r/w20(b)(ii)(B)–ன் கீழான குற்றச்சாத்து பொறுத்து எதிரிகளுக்கு எதிராக அனுமானிக்கும் வகையில் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி உள்ளதால் அதனை NDPS சட்டப்பிரிவு 54–ன் பிரகாரம் மறுத்துரைக்கும் விதமாக எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் முன்னிடப் பட்டிருக்கவில்லை. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் எதிரிகள் மீதான NDPS சட்டப்பிரிவு 8(c)r/w20(b)(ii)(B)–ன் கீழான குற்றச்சாத்து அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15. இவ்வழக்கில் NDPS சட்டப்பிரிவு ச–பி 29(1) r/w 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act of NDPS Act 1985 –ன் கீழான குற்றச்சாத்து குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் எதிரிகள் இருவரும் ஒருவருக்கொருவர் திட்டமிட்டு சதி செய்து கஞ்சா கடத்தி வந்ததாக அரசு தரப்பில் அசா1, அசா2ன் சாட்சியத்தின் பிரகாரமும் அசாஆ1 முதல் அசாஆ13

சான்றாவணங்களின் பிரகாரமும் குறிப்பிட்டு விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. 1,2 எதிரிகள் இருவரும் எந்த இடத்தில் வைத்து ஒன்றுகூடி சதி திட்டம் தீட்டினார்கள் என்பது குறித்து அரசு தரப்பில் அசா1 மற்றும் அசா2 சாட்சியத்தில் விபரம் தெரிவித்திருக்கவில்லை,.

16. மேலும் அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் பிரகாரம் 1,2 எதிரிகள் திட்டமிட்டு சதி செய்து போதைப்பொருளை கடத்தியதாக அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதால் அது வகைக்கு எதிரிகள் மீதான NDPS சட்டப்பிரிவு ச–பி 29(1) r/w 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act of NDPS Act 1985 –ன் கீழான குற்றச்சாத்து அரசு தரப்பில் ஆதாரங்களின் வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டிருக்க வில்லை.

17. ஆகவே எதிரிகள் ச–பி 29(1) r/w 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 –ன் பிரகாரம் குற்றச்சாத்து அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிராக தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 1,2 எதிரிகள் ச–பி 29(1) r/w 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act of NDPS Act 1985 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. ஆகவே 1,2 வது எதிரிகள் சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என முடிவு செய்து, 1,2 எதிரிகளுக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து 1,2 எதிரிகளிடம் வினவ, 1,2 எதிரிகள் கீழ்கண்டவாறு கூறினார்கள்.

1) எனது வயது 54 ஆகும். அம்மா, அப்பா இல்லை. தனி ஆளாக உள்ளேன். என்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டுகிறேன்.

2) எனது வயது 29 ஆகும். எனக்கு வயதான பெற்றோர் உள்ளனர். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நான் செய்த தப்பை உணர்ந்து திருந்திவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்.

ஆகவே, 1,2 எதிரிகளின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2024–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் 1,2 எதிரிகள் தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார்கள் என்பதாலும் 1,2 எதிரிகளின் கோரிக்கையினை ஏற்றும், 1,2 எதிரிகளுக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

19. முடிவாக 1,2 எதிரிகளை 1985–ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9–01 ச–பி 29(1) r/w 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act of NDPS Act 1985 –ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து குவிமுச 235(1)/258 BNSS

Act ன் கீழ் விடுதலை செய்தும் ,

1 வது எதிரி ச–பி 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் படி குற்றவாளி என்று தீர்மானித்து மேற்படி பிரிவின் கீழான குற்றத்திற்கு 100 நாட்கள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் அபராதம் ரூ.10,000/– விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும் ,

2 வது எதிரி ச–பி 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் படி குற்றவாளி என்று தீர்மானித்து மேற்படி பிரிவின் கீழான குற்றத்திற்கு 75 நாட்கள் கடுங்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் அபராதம் ரூ.10,000/– விதித்தும் அபராதம் கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும் ,

1,2 எதிரிகள் ஏற்கனவே சிறையில் இருந்த காலங்களை தண்டனை காலத்திலிருந்து BNSS பிரிவு 428–ன் கீழ் கழித்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

(1 வது எதிரி 09.01.2024 முதல் 15.04.2024 வரை சிறையில் இருந்து வந்துள்ளார்)

(2 வது எதிரி 09.01.2024 முதல் 28.03.2024 வரை சிறையில் இருந்து வந்துள்ளார்)

1,2 எதிரிகளுக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/– + ரூ.10,000/– = ரூ.20,000/–ஆகும்.

20. இவ்வழக்கில் ஆர்பிஎண்.10/2024–ல் குறியீடு செய்யப்படாத மாதிரி கஞ்சா மற்றும் மீதமுள்ள கஞ்சாவை பொறுத்து இந்நீதிமன்ற

சிஆர்எம்பி 4389/2024 நாள் 12.08.2024–ம் தேதியன்று ஏற்பட்ட உத்தரவின்படிக்கு அழித்திருப்பின், அழித்தது போக மீதமுள்ள கஞ்சா இருப்பின் அதனை இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும்

சா.பொ.1 செல்போன் , சா.பொ.4 VIVO ஆண்ட்ராய்டு செல் போன் ஆகியவை மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ அரசுடமைக்காவும் ,

சா.பொ.2 ரயில் டிக்கெட், சா.பொ.3 பேக் ஆகியவை மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ உரிய Drugs Disposal Committee மூலம் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.03.13 17:29:56 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்

அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

சாட்சி பட்டியல்–

அரசு தரப்பு சாட்சிகள்–

அ.சா.1 திரு. அழகேசன், தலைமைக் காவலர்

அ.சா.2 திரு.காளிமுத்து, சிறப்பு சார்பு ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>**

அ.சா.ஆ.1 சோதனை சம்மத கடிதம்

அ.சா.ஆ.2 சோதனை சம்மத கடிதம்

அ.சா.ஆ.3 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து

அ.சா.ஆ.4 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து

அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசர்

அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசர்

அ.சா.ஆ.7 ஆய்வு நமூனாக்கள்.

அ.சா.ஆ.8 ஆய்வு நமூனாக்கள்.

அ.சா.ஆ.9 முன்தகவல் கடிதம்.

அ.சா.ஆ.10 முதல் தகவல் அறிக்கை.

அ.சா.ஆ.11 ச/பி 57 ன் படியான விரிவான அறிக்கை.

அ.சா.ஆ.12 பகுப்பாய்வு அறிக்கை

அ.சா.ஆ.13 படிவம் 95.

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u>** –

அ.த.சா.பொ.1 செல்போன்

அ.த.சா.பொ.2 ரயில் டிக்கெட்.

அ.த.சா.பொ.3 பேக்

அ.த.சா.பொ.4 ஆண்ராய்டு செல்

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்</u>**–

இல்லை.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.03.13 17:30:04 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்

அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**<u>பின்குறிப்பு</u>**

1. விசாரணை காலத்தில் 1வது எதிரி சிறையில் உள்ளார். 2வது எதிரி பிணையில் இருக்கிறார்.

2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. எதிரிகளுக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

Fair/Draft

Judgment in C.C.165/2024

Dt.13.03.2026.